செ.வெ.எண் -43 நாள்:23.01.2018

# அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பள்ளி மற்றும் வளர்ச்சித்துறை சார்ந்த பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், கவரப்பாளையம் ஊராட்சி, மணக்கொல்லை மற்றும் சூரக்குழி ஆகிய பகுதிகளில் உள்ள பள்ளி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (23.01.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், கவரப்பாளையம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், பள்ளியின் மாணவ, மாணவியர்களுடைய தேர்ச்சி விகிதம் குறித்து, பாட வாரியாக ஆய்வு செய்து, கற்றல் தொடர்பான ஆலோசனைகளை பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களுக்கு வழங்கினார்கள்.

பின்னர், மணக்கொல்லையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மேலும், சூரக்குழியில் தனிநபர் இல்லக்கழிப்பறைகள் கட்டும் பணிகளை பார்வையிட்டு, அப்பகுதி பயனாளிகளிடம் கழிவறைகளை அனைவரும் பயன்படுத்திட வேண்டும் எனவும், தங்களுடைய சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.